**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 164/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணாச்சலம் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | வேலுமயில் | தொழில் | : | ஓய்வு பெற்ற ஆசிரியர் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 92 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர். வேலை செய்து வருகிறேன். 30.06.2022 அன்று நான் எங்கள் வீட்டு ஹாலில் டீ.வி பார்த்து கொண்டிருந்தேன். என்னுடைய மகள் ஆக்னஸ் ராணி என்னுடன் தங்கியிருந்தார். அவர் காலை 08.00 மணியளவில் வேலைக்கு செல்வார். இரவு 08.30 -09.00 மணியளவில் தான் அவர் வீட்டிற்கு வருவார். அதுவரைக்கும் நானும், என் மனைவியும் அவரை பார்த்து காத்திருப்போம்.

நான் சன் டீவியில் சீரியல் பார்ப்பேன். என்னுடைய மனைவி ஆன்மிகபுத்தகங்களை படிப்பார். அன்றைய தினம் இரவு 08.00 மணியிருக்கும். கயல் என்ற சீரியல் சன் டீவியில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த நாடகம் முடியப்போகும் நேரத்தில் அப்பா, அப்பா என்று சத்தம்

கேட்டது. நான் எழும்பி வெளியே வந்தேன். நான் வெளியே வந்தபோது, என் மனைவியின் சத்தம் கேட்கவில்லை. அப்போது ஒரு நபர் என்னுடைய கழுத்தை அமுக்கி, கீழே குனிய வைத்தார். இன்னொரு நபர் என்னுடைய மனைவியின் வாய்க்குள் கையை போட்டு அழுத்தினார். அதற்குள், என்னுடைய கையையும், காலையும் கட்டினார்கள். என்னுடைய சாரத்தை அவிழ்த்து கண்ணையும் கட்டினார்கள்.

என்னுடைய மனைவியின் முகத்தையும் துணியால் கட்டி மறைத்தார்கள். என்னை கீழே போட்டு இழுத்து, ரூமில் போட்டு அடைத்தார்கள். என்னுடைய மனைவியையும் கையும், காலையும் கட்டி இழுத்து கொண்டு, ரூமில் என் மீது போட்டார்கள். நான் மரப்பெட்டியில் வைத்திருந்த ரூபாய் பத்து இலட்சத்தை வந்தவர்கள் எடுத்தார்கள். எதிரி மாரியப்பனை எனக்கு ஏற்கனவே தெரியும். நான் 10 கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தேன். அதில், ஒரு கடையில் எதிரி மாரியப்பன் வாடகைக்கு இருந்தார். அந்த கடைக்கு வாடகை 2, 3 மாதங்கள் எதிரி மாரியப்பன் தரவில்லை. கரண்ட் பில்லும் கட்டவில்லை. அதனை கேட்டதற்கு உன்னால் ஆனதை பார்த்துக்கொள் என்று சொன்னார். அதனால் தான் என் வீட்டில் வந்து இவ்வாறு செய்தார்கள்.

என்னுடைய வீட்டிலிருந்து 100 பவுண் நகைகளை எடுத்து கொண்டு சென்றார்கள். வந்திருந்த நபர்களை என்னால் அப்போது சரியாக பார்க்க முடியவில்லை. ஏதோ மயக்க மருந்தை என்னுடைய மூக்கில் வைத்ததினால் என்னால் பார்க்கமுடியவில்லை. 09.00 மணிக்கு என்னுடைய மகள் வீட்டிற்கு வந்தபோது, வீடு திறந்து கிடந்தது. லைட்டை

போட்டு பார்த்தபோது, நாங்கள் கட்டப்பட்டு கிடந்ததை பார்த்தார். பின்னர், அரிச்சந்திரன் என்பவருக்கு போன் செய்தார். இதர நண்பர்களும் வந்தார்கள். பின்னர், எங்களை ஜி.ஜே மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். என்னுடைய மகள் போலீசாரிடம் புகார் கொடுத்தார். போலீசார் ரூ.8,09,000/- பணத்தை கைப்பற்றி கொடுத்தார்கள். நகை எவ்வளவு திரும்ப கிடைத்தது என்ற தற்போது என்னால் சொல்ல முடியாது. **(சாட்சிக்கு 92 வயது ஆனதினால் பதற்றமாக இருந்து சாட்சியம் அளித்தார்).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** -

நான் போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் சொல்லியுள்ளேன். எதிரிகள் என்னுடைய முகத்தில் மயக்க மருந்து வைத்து காட்டியதாக சொல்லப்பட்ட கர்சிப்பை நான் போலீசார் விசாரணையில் கொடுத்தேனா? என்றால் இல்லை. நான் மாரியப்பன் மீது கடையை காலி செய்ய சொல்லி கொடுத்த புகார் மனுவை போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை. நான் 5 நாட்கள் மயக்கமாக இருந்தேன் என்றால் சரியல்ல. 2 நாட்கள் மட்டும் மயக்கமாக இருந்தேன். என்னென்ன நகை காணாமல் போனது என என் மகளிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் மருத்துவமனையிலிருந்து நர்ஸ்கள் வந்துள்ளார்கள். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி மாரியப்பன் மீது சந்தேகத்தின்

பேரில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகமில்லை. சம்பவநாளிலும், 2 நாட்கள் கழித்தும் விசாரித்தார்கள்.

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 19:00:15 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பூசைத்துரை | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | இன்ஜினியர் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(2, 3, 10 ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். சாட்சி அருணாச்சலம் எனக்கு பெரியப்பா உறவு வேண்டும். சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை 07.00 மணியளவில் என்னுடைய பெரியப்பா வீட்டில் கூட்டமாக ஆட்கள் நிற்கிறார்கள் என்று கேட்டு நான் அங்கு சென்றேன். என்னுடைய பெரியப்பா, பெரியம்மா வீட்டில் நடக்க முடியாமல் இருந்தார்கள். பின்னர், போலீசில் தகவல் சொன்னோம். என்னுடைய பெரியப்பாவையும், பெரியம்மாவையும் பக்கத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தோம். என்னுடைய பெரியப்பாவிற்கு கால் உடைந்திருந்தது. பெரியம்மாவிற்கு கை உடைந்திருந்தது. என்னுடைய பெரியப்பா, பெரியம்மாவை வீட்டில் திருட வந்தவர்கள் தாக்கியதாக

கேள்விபட்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

__எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை__ –

நான் போலீசார் விசாரணையில், முதல் விசாரணையில் கூறியுள்ளவாறு தான் கூறியுள்ளேன். போலீசார் என்னை காலை 07.00 மணிக்கு விசாரித்தார்கள்.

__மறுவிசாரணை__ –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 19:00:23 +0530